# ஒக்லஹோமா தமிழ்ச் சங்கம்

தமிழ் முல்லை

## OKLAHOMA TAMIL SANGAM

*8304 N.W. 113 Terrace, Oklahoma City, OK 73162*

*( A Registered Non-Profit Tax Exempt Organization)*

*Established in 1991*

மலர் 3 அக்டோபர் 1993


அன்புள்ள ஒக்லஹோமா தமிழ் அன்பர்களுக்கு,

நம் தமிழ்ச் சங்கம் உருவாகி இரண்டாவது ஆண்டு நிறைவு பெறவிருக்கிறது. நம் தமிழ்ச்சங்கத்தின் பழைய சாதனைகளையே பேசி நிறைவு பெறாமல், இனி வரப்போகும் நிகழ்ச்சிகளும், செயல்களும் அமெரிக்கத் தமிழர் யாவரும் போற்றும் வண்ணம் பன்மடங்கு சிறப்பாக வளர்ச்சியுற மேலும் ஆர்வமுடன் செயல்படவேண்டும். நம் தமிழ் மரபைக் காக்கவும், பண்பாட்டைப் போற்றவும், நம் பழந்தலைமுறையினரைப் பற்றி நம் இளந்தலைமுறையினர்க்கு அறிவிக்கவும், தாய்மொழியை மகிழ்ந்து போற்றவும் குறிக்கோள் கொண்டு செயல் படுவோம். இத்தொண்டில் ஒரு சிறு பகுதியாக 'தமிழ் முல்லை' நம் தமிழன்பர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நவம்பரில் வெளியாகவிருக்கும் ஆண்டு மலரில் உங்கள் கைத்திறனைக் காட்ட வண்ணத்தூரிகையால் செந்தமிழ்ச் சித்திரங்களைத் தீட்டுங்கள். உடனடியாக உங்கள் படைப்புக்களை அனுப்பி வையுங்கள். முன்னிலும் சிறப்பாக ஒக்லஹோமா தமிழர்க்குப் பெருமை தேடித் தரும் வண்ணம் இவ்வாண்டு ஆண்டு மலர் அமைய வேண்டும் என்பது என் குறிக்கோள். உங்கள் தமிழ்த் திறம் வெளிப்பட, தமிழ்ப் பண்பாட்டை அடியொற்றிய படைப்புக்கள் எதிர்பார்க்கிறோம். சென்ற ஆண்டு நவம்பர் மாதம் வெளியிட்ட ஆண்டுமலரைச் சிறப்பாக யாத்திட உதவிய உங்கள் யாவருக்கும் என் நன்றிகள். பல மாநிலங்களிலிருந்தும் நம் படைப்புக்களுக்குப் பாராட்டுதல்கள் வந்தன. நம் தமிழ்ச் சொந்தம் கொண்டாடவும், நண்பர்களுடன் கலந்து களித்திடவும், எதிர்காலத்திற்குரிய ஆக்கப் பணிகளைத் தீட்டிடவும், அறுசுவை விருந்தினை மாந்திடவும், உங்கள் யாவரையும் அழைக்கிறேன். நவம்பர் 20 ஆம் தேதி தல்சாவில் யாவரும் சந்திப்போம். வணக்கம்.

அன்புடன்
தி. லெ. பரசுராம்

<u>பெருங்கவிக்கோ டாக்டர் சேதுராமன் அவர்களின் வருகை</u>

கவிஞர் அவர்கள் பெர்லினில் முப்பதிற்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள் கலந்து கொண்ட பன்னாட்டுத் தமிழுறவு மாநாட்டினை முடித்துக் கொண்டு பின் அமெரிக்காவிற்கு வருகை தந்தார். ஐம்பத்தெட்டு கவிதை இலக்கியங்களைப் படைத்திருக்கும் இவர் ஒக்லஹோமா தமிழ்ச் சங்கத்தில் 'திருக்குறளும் வாழ்க்கை நெறியும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

'தரணிவாழும் தமிழர்களே தனித்து நிற்கலாமா? சரித்திரம் படைக்கவொரு தமிழணியில் சேர்வீர்'

என்று கூறி அயல் நாட்டுத் தமிழர்களை விழித்தெழச் செய்யும் தம் கொள்கையை நம் முன் வைத்தார். இந்தியக் கலாசாரக் குழு கோயிலில் இந்த கூட்டம் சிறப்புற நடந்தது. வந்திருந்தோர் செவிக்குணவிற்குச் சிறிதுவயிற்றுணவினைப் பரிமாறிக் கொண்டனர். அன்புக் காணிக்கையாக பணமுடிப்பொன்று பெருங்கவிக்கோவுக்கு அளிக்கப் பட்டது. பணமுடிப்பின் பெரும்பங்கை திரு சுந்தர ராஜன் அளித்தார்.

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்!

நமது தமிழ்ச் சங்கம் ஒரு வரி விலக்குச் சங்கமாக (Non-profit Organization) இயங்கி வருகிறது. தயவு செய்து அகம் மலர்ந்து ஆர்வமுடன் எல்லோரும் நம் சங்கத்தில் உறுப்பினராய்ச் சேர்ந்து தமிழர் என்ற தனித் தன்மையை நிறுவிடுவீர்.

## 1992-93 செயற்குழு

தி. ஜெ. பரசுராம் - தலைவர் (405) 728-1840
கே. ஹேமந்த்குமார் - துணைத்தலைவர் (918) 252-4081
மு. மாசிலாமணி - செயலர் (405) 321- 6288
ச. லட்சுமிவராகன் - இணைச்செயலர் (405) 360-5943
கே. ரூம்சந்த் - பொருளர் (405) 842-2412

### செயற்குழு அங்கத்தினர்:

கி. சேகர் (405) 340-8069
லலிதா சுந்தரராஜன் (405) 360-0811
சி. சண்முகமணி (405) 327-5149
கிருஷ்ணமூர்த்தி (918) 224-3377

## அமெரிக்கக் கூட்டுத் தமிழ்ச் சங்க மாநாடு

இவ்வாண்டு மாநாடு ஜூலை 2,3,4 தேதிகளில் விஸ்கான்சினில் மிகச்சிறப்பாக நடை பெற்றது. சிறப்பு விருந்தினராக மதிப்புமிகு சிலம்பொலி செல்லப்பனார் வருகை தந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார். நம் சங்கத்தின் உறுப்பினர்கள் ஒக்லஹோமாவிலிருந்து திரு சுந்தரராஜன் அவர்களும், தல்சாவிலிருந்து திரு. சோமசுந்தரம் அவர்களும் மாநாட்டுக் கூட்டங்களில் தங்கள் கவிதை, வேடிக்கை நாடகங்களாலும், நளபாகத்தினாலும் தமிழன்பர்களை மகிழ்வித்தனர். மற்றும் பல தமிழறிஞர்கள் அமெரிக்காவின் பல பகுதிகளிலிருந்தும், தமிழ் நாட்டிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர். தமிழ்ப்பண்பாடு, மொழி, தமிழ் மக்கள் இவர்களின் நலனுக்காக பல திட்டங்களை உருவாக்கிச் செயல் படுத்தி வருகின்றனர். நம் சங்க உறுப்பினர்கள் யாவரும் அடுத்த ஆண்டு தம் திறமைகளை வெளிப் படுத்த இம்மாநாட்டிற்கு சென்று வர வேண்டும் என வேண்டுகிறோம்.

## அனைத்து உறுப்பினர் குழுக் கூட்டமும், ஆண்டுத் தேர்தலும்

அடுத்த இரண்டாண்டுகளுக்கான இயக்கக்குழு அங்கத்தினர்க்கான தேர்தல் நவம்பரில் நடக்கவிருக்கும் தமிழ்க் கூட்டத்தின் இடைவேளையில் நடைபெறும். தலைவர், துணைத்தலைவர், செயலர், துணைச்செயலர், பொருளாளர் ஆகிய பொறுப்புகளுக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர். தொண்டுள்ளம், தமிழுணர்வு, ஊக்கம், ஆர்வம் உள்ள அங்கத்தினர்கள் இப்பணிகளை ஏற்க முன்வருமாறு அழைக்கிறோம். திரு ஏ. ரவீந்திரன் அவர்கள் தேர்தல் அதிகாரியாக பொறுப்பேற்றுள்ளார். சங்கத்து அங்கத்தினர் யாவரையும் தேர்தலில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## ஐந்தாம் தமிழ்க் கூட்டம்


ஒக்லஹோமா மாநிலத் தமிழ்க் கூட்டம் இவ்வாண்டு நவம்பர் 20ஆம் நாள் சனிக்கிழமை பிற்பகல் தல்சா, ஒக்லஹோமாவில் நடக்கவிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் முன்னிலும் சிறப்பாக வளர்ந்து வந்திருக்கும் இவ்விழா இன்னும் வியக்கத்தக முறையில் அமைய உங்கள் கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன. மேலும் சிறப்புற இக்கூட்டத்தை நடத்துவதற்கு உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை.

## ஐந்தாம் தமிழ்க் கூட்டத்தின் கலை நிகழ்ச்சிகள்:

இவ்வாண்டு கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் தங்கள் இயல் இசை நாடக ஒத்திகைகளை அல்லது திறமைகளைக் குறித்துத் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்

திரு. பரசுராம் (405) 728-1840
திரு. ஹேமந்தகுமார் (918) 252-4061
திரு சோமசுந்தரம் (918) 250-4045
திரு ராம் ஜெயராம் (918) 493-5766

கலை நிகழ்ச்சிகள் எளிமையாய் இனிமையாய் எல்லோரையும் மகிழ்விப்பதாய் தமிழ் மணமுடையதாய் இருக்க வேண்டும்.




## விருந்து விவரம்:

நம் தமிழ் விழாவின் வெற்றியில் நம் சுவைமிகு உணவும் ஓர் இன்றியமையா இடம் பெறுவது அனைவரும் அறிந்ததே. உணவு ஏற்பாடுகள் செய்வதற்கு முன்வந்துள்ள நான்கு அன்னையரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. தயவு செய்து அவர்களுடன் போனில் அழைத்து உங்கள் பங்கு என்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள். உண்டி படைக்க இயலாதவர்கள் நிதி உதவியோ நற்சொல்லுதவியோ தரலாம்.

தல்சா:
திருமதி சகுந்தலா ஹேமந்த் குமார் (918) 252-4061
திருமதி மஞ்சுளா கிருஷ்ணமூர்த்தி (918) 224-3377

ஓக்லஹோமா சிடி:
திருமதி லலிதா சுந்தரராஜன் (405) 360-0811
திருமதி சாந்தா வராகன் (405) 360-5943

மேலும் உங்கள் கேள்விகளுக்கு தமிழ்ச் சங்கத் தலைவர் பதிலளிக்கக் காத்திருக்கிறார்.



## ஆண்டு மலர்

இந்த ஆண்டும் ஐந்தாம் தமிழ்க் கூட்டத்தில் ஆண்டு சிறப்பு மலரான தமிழ் முல்லை வெளிவரவிருக்கிறது. சென்ற ஆண்டு தமிழ்முல்லைக்குப் பல வெளியூர்களிலிருந்தும் பாராட்டுக்கள் வந்தன. உங்கள் எழுத்துக்களை ஆர்வமுடன் படித்தோர் வியந்து பாராட்டினர். அதேபோல் வெற்றிகரமாய் முன்னிலும் பன்மடங்கு மேலாக தமிழ் முல்லைக்குப் பெருமை தேடித் தரும் கதைகள், கவிதைகள், செய்திகள், கருத்துக்கள், சிறுகதைகள் வரவேற்கப் படுகின்றன. உங்கள் தமிழ்த்திறம் வெளிப்பட, தமிழ்ப் பண்பாட்டைப் போற்றிட, நம் வழித்தோன்றல்கள் வழிவழியாக அதைக் காத்திட, உங்கள் படைப்புகளை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டிட இன்றே படைத்திடுங்கள். அனுப்ப வேண்டிய கடைசி தேதி நவ. 1. தமிழ் முல்லையை அச்சிடும் செலவுக்கு உங்களிடமிருந்து வரும் விளம்பரங்களும் நல்வாழ்த்துக்களும் மிகவும் பயன்படும். உங்கள் விளம்பர விவரங்களுக்கும் படைப்புக்களை அனுப்புவதற்கும் தொலைபேசி எண், முகவரி

Radha Parasuram (405) 728-1840
8304 N.W. 113 Terr.
Oklahoma City, OK 73162

| | | | |
|---|---|---|---|
| 11 1/2 x 8 1/2 | - | முழுப்பக்க விளம்பரம் | $ 50.00 |
| 8 1/2 x 5 3/4 | - | அரைப்பக்க விளம்பரம் | $ 30.00 |

## கூட்டம் முடிந்த பின் தல்சாவில் தங்குவோர்க்கு:

கூட்டம் முடிந்தபின் சனிக்கிழமை இரவு தல்சாவில் தங்குவோருக்காக 'அடையா நெடுங்கதவு'கள் சில தங்களுக்காக காத்திருக்கும். ஆர்வமுடையோர் அவசியமுடையோர் அணுகவேண்டிய நண்பர்களின் எண்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

திரு. சோமசுந்தரம் - (918) 250-4045
திருமதி. பத்மா ஜெயராமன் - (918) 493-5766
திரு. ஹேமந்த் குமார் - (918) 252-4061
திரு. கிருஷ்ணமூர்த்தி - (918) 224-3377




ஒக்லஹோமா
ஐந்தாம்
தமிழ்க் கூட்டம்

# OKLAHOMA TAMIL SANGAM

# FIFTH TAMIL KOOTAM


***THIS YEAR'S GRAND TAMIL KOOTAM WILL BE ON NOVEMBER 20, 1993, SATURDAY AT 3:00 PM***

**AT THE TULSA TECHNOLOGY CENTER**

**(Formerly VO-TECH College)**

**3420 S. Memorial Drive, Tulsa, OK 74145**

***(On Memorial between 31st Street and 41st Street. Near the intersection of I-44 and Broken Arrow Expressway)***



இவ்வாண்டும் தமிழன்பர்கள் யாவரும்
வருகைதந்து விருந்துண்டு மகிழ்ந்து
இவ்விழாவினைச் சிறப்பித்து
வெற்றிகரமாக நடத்திவைக்க
கோருகிறோம்

**MARK YOUR CALENDAR !!!**